## 17.3 வீட்டு வரி வசூலில் 20 சதவீதத்திற்கு குறையாமல் குடிநீர் பராமரிப்பிற்கு பயன்படுத்துதல்

ஊரக வளர்ச்சித் துறை

அரசாணை (நிலை) எண். 108 நாள் : 25.06.1999

படிக்க :

அரசாணை (நிலை) எண்.260, ஊரக வளர்ச்சித்துறை நாள் : 09.12.1998.

**ஆணை**

மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு கூடுதல் அதிகாரங்கள், உரிமைகள் மற்றும் பொறுப்புகள் வழங்க ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களை அமைப்பாளராகக் கொண்டு உயர்நிலைக்குழு அமைக்கப்பட்டது. அக்குழு தனது அறிக்கையை 11.01.1999 அன்று அரசுக்கு சமர்ப்பித்தது. உயர்நிலைக்குழு அறிக்கையிலுள்ள பரிந்துரைகளை அரசு ஏற்பது குறித்து முடிவு செய்ய 03.05.1999 மற்றும் 04.05.1999 ஆகிய நாட்களில் அமைச்சரவை கூட்டங்களில் பரிசீலிக்கப்பட்டது.

2. கிராம ஊராட்சிகள் தங்கள் பகுதிகளுக்குள் உள்ள வீடுகளுக்கு வீட்டு வரி விதிக்கவும், அதனை வசூலிக்கவும் 1994ம்ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 172ல் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு வசூலிக்கப்படும் தொகை கிராம ஊராட்சிகளின் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

3. பார்வையில் கண்டுள்ள ஆணையில் கிராமப்புற மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க ரூ.1000 காப்புத் தொகையாகவும், மாதாந்திர குடிநீர் கட்டணமாக ரூ.30ம் ஊராட்சிக்கு செலுத்த முன் வருவோரில் வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு தரும் அதிகாரத்தை கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. உயர்நிலைக்குழுவின் அறிக்கை, பகுதி 1 பொதுப் பரிந்துரைகளில், இனம் 10ல் கிராம ஊராட்சிகளில் வீட்டு வரி வசூலில் 20 விழுக்காட்டுக்கு குறையாமல் குடிநீர் பராமரிப்புக்கு பயன்படுத்த கிராம ஊராட்சிகளுக்கு அதிகாரம் வழங்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இப்பரிந்துரையை 03.05.1999 மற்றும் 04.05.1999 ஆகிய நாட்களில் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

4. உயர்மட்டக் குழுவின் பரிந்துரையினை ஏற்று கிராம ஊராட்சிகளில் வீட்டு வரி வசூலில் 20 விழுக்காட்டுக்கு குறையாமல் குடிநீர் பராமரிப்புக்கு பயன்படுத்த கிராம ஊராட்சிகளுக்கு அதிகாரம் அளித்து அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வாணையை கிராம ஊராட்சிகளின் கவனத்திற்கு கொண்டு சென்று செயல்படுத்த அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**

அரசு செயலாளர்

## இணைப்பு

**சமூக சொத்துகளை பேணுதல் குறித்து மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் கூடுதல் அதிகாரங்கள்**

**கிராம ஊராட்சிகள்**

1. ஊராட்சி ஒன்றியப் பகுதியிலுள்ள சமூக சொத்துகள் தவறாகப் பயன்படுத்தப்படாமல் மேற்பார்வையிடுவதும், ஆக்கிரமிப்பு மற்றும் இழப்பீடு ஏற்படாமல் விழிப்போடு இருப்பதுடன், அவ்வாறு நடந்தால் தேவையான நேரத்தில் அந்தந்த கிராம ஊராட்சிகள் சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம்.

**ஊராட்சி ஒன்றியங்கள்**

1. ஊராட்சி ஒன்றியங்களுக்கு சொந்தமான வருமானம் ஈட்டக்கூடிய எந்த விதமான சொத்துக்களையும் பொது ஏலத்தின் மூலம் குத்தகைக்கு விடலாம். அதற்கான வாடகைத் தொகை குத்தகை தொகை நிர்ணயிக்கும் அதிகாரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்தது. இதற்கான விளக்கங்கள் ஊராட்சிகள் சட்ட விதிகளிலும் அரசு செயல் ஆணைகளிலும் உள்ளது.
2. சமூகச் சொத்துகளை தவறாகப் பயன்படுத்தாமல் மேற்பார்வையிடுவதிலும் ஆக்கிரமிப்பு மற்றும் இழப்பீடு ஏற்படாமல் விழிப்போடு இருத்தலும் அவ்வாறு நடந்தால், தேவையான நேரத்தில் அதற்கான சட்டப்படி நடவடிக்கைகளை ஊராட்சி ஒன்றியங்கள் மேற்கொள்ளலாம்.

**மாவட்ட ஊராட்சிகள்**

1. வணிக மற்றும் இதர சொத்துகளுக்கான வரி, வாடகை உபயோகிப்போர் கட்டணம் ஆகியவற்றை நிர்ணயித்து அவற்றை வசூலிக்கலாம்.
2. மாவட்ட ஊராட்சிகளின் சொத்துக்களை, குத்தகைக்கு விட்டு, அதற்குண்டான வாடகை வசூலிக்கலாம்.
3. மாவட்ட ஊராட்சிகள், சமுதாய சொத்துக்கள் தவறாகப் பயன்படுத்தப்படாமல் மேற்பார்வையிடுவதுடன், ஆக்கிரமிப்பு மற்றும் இழப்பீடு ஏற்படாமல் விழிப்போடு இருந்து சட்டப்படியான நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்